செ.வெ.எண்.65 நாள்: 31.10.2020

# தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் ஒன்றியம் பசுவந்தனை ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பணிகளை மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு கடம்பூர் செ.ராஜூ அவர்கள் துவக்கி வைத்தார்

---

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் ஒன்றியம் பசுவந்தனை ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பணிகள் துவக்க நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (31.10.2020) நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் கலந்துகொண்டு பசுவந்தனை ஊராட்சியில் 1,367 வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பணிகளை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.சின்னப்பன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

பின்னர் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு கடம்பூர் செ.ராஜூ அவர்கள் தெரிவித்ததாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் அனைத்து கிராம பகுதிகளிலும் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மூன்று ஆண்டுகளில் வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட உள்ளது. இந்த ஆண்டில் 976 குக்கிராமங்களில் உள்ள 1,67,356 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இன்று ஓட்டப்பிடாரம் ஒன்றியம் பசுவந்தனை ஊராட்சியில் 967 வீடுகளுக்கு ரூ.48.76 லட்சம் மதிப்பிலும், பசுவந்தனை அலிபச்சேரி கிராமத்தில் 400 வீடுகளுக்கு ரூ.21.03 லட்சம் மதிப்பிலும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் பசுவந்தனையில் 14வது மத்திய நிதிக்குழு நிதி ரூ.12.75 லட்சம் மதிப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டும் பணிகளும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை என்னென்ன தேவை என்பதை அறிந்து அவை அனைத்தையும் நிறைவேற்றி வருகிறது என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் திரு.மோகன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.தனபதி, கோவில்பட்டி கோட்டாட்சியர் திருமதி.விஜயா, மாவட்ட கவுன்சிலர்கள் திரு.சந்திரசேகர், திரு.தேவராஜ், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் திரு.கோபி(எ)அழகிரி, திரு.ஆலோசனைமரியாஸ், திருமதி.சுவேதாமுருகன், வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.கெலன்வளர்மதி, பசுவந்தனை ஊராட்சி தலைவர் திருமதி.லட்சுமி சிதம்பரம், முக்கிய பிரமுகர்கள் திரு.போடுசாமி, திரு.முத்துசாமி, திரு.குருராஜ் மற்றும் முக்கிய பிரமுகர்கள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.